ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முரசொலி நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)-ன்படி, இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

முற்பகல் 10-45

முரசொலி நாளிதழ் ஆசிரியரை இப்பேரவை நேரடியாகக் கொண்டு வந்து கண்டிக்க வேண்டுமென பேரவை முடிவு செய்துள்ளதால் உடனடியாக அவ்வாசிரியரை இப்பேரவைமுன் வரவழைத்து கூண்டில் ஏற்றித் தண்டனையை நிறைவேற்ற உரிய சம்மன் அனுப்பப்படும். அப்பத்திரிகை நிருபர்களுக்கு பேரவையின் நடவடிக்கைகளைக் குறிப்பு எடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதியினை இன்றுமுதல் ரத்து செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) 'கோவை மாலை முரசு' நாளிதழ் மீதான உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 10-4-1992 ஆம் நாளன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற 'கோவை மாலை முரசு' நாளிதழ் மீதான் அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229 (ஆ)-ன்கீழ் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

" கோவை மாலை முரசு நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டமன்றப் பேரவையின் விதி 229 (ஈ)-ன்படி இப்பேரவை இசைந்து ஏற்றுக் கொள்ள வேண்டும் "

எனக் கோருகிறேன்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே இன்றைக்கு ஒரு பத்திரிகை ஆசிரியரை இங்கே கூண்டிலே கொண்டுவந்து நிறுத்தி விசாரிப்பதாக ....(குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஏற்கெனவே அது நிறை வேற்றப்பட்டது. இன்று இந்த கோவை மாலை முரசு பத்திரிகை பற்றிய அறிக்கை மீது உங்களுடைய கருத்து ஏதாவது இருந்தால் கூறலாம். ஏற்கெனவே பேரவை முடிவு செய்ததன் மீது உங்களுடைய கருத்தைக் கூறுவது என்பது பேரவையை அவமதிப்பதாகத்தான் ஆகும். இந்தத் தீர்மானத்தின் மீது உங்க ளுடைய கருத்தைக் கூறலாம்,

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை

1992 ஏப்ரல் 20] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறபோது. எல்லா உறுப்பினர்களுக்கும் பேசுவதற்கு உரிமையுண்டு. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான், இப்போது நீங்கள் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். நீங்கள் கோவை மாலை முரசின் மீது பேசுங்கள், கொண்டு வந்திருக்கிற தீர்மானம் கோவை மாலை முரசு மீது, நீங்கள் வேறு பிரச்சினைக்குப் போகிற காரணத்தால்தான் சொன்னேன்,

திரு. எஸ். திருநாவுக்கரசு : சரி, சரி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பேரவைத் தலைவருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் என்னுடைய வேண்டுகோள். இதேபோல ஒவ்வொரு பத்திரிகையாகக் கொண்டுவந்து, சபையிலே கூண்டிலே ஏற்றுவது தமிழ் நாடு வரலாற்றிலே இல்லாத அளவிற்கு பத்திரிகைகளுக்கு எதிராக இருப்பதற்குப் பதிலாக, ஏற்கெனவே உரிமைக் குழு பரிந்துரை செய்து அனுப்பினாலும்கூட, மீண்டும் சட்டமன்றம் அந்தக் குழுவினுடைய மறுபரிசீலனைக்கு அனுப்புவதற்கு சட்டமன்ற விதிகளிலேயும் இடமிருக்கிறது. எனவே. ஏற்கெனவே உரிமைக் குழு பரிந்துரை செய்திருந்தாலும். அவற்றையெல்லாம் மீண்டும் உரிமைக் குழுவிற்கு அனுப்பி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அதுபோல பத்திரிகையாளர்களும் சென்ற சனிக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே ஒரு 'காம்பரமைசாக' இதுபோல பத்திரிகைகளுக்கும் விரோதமாக இந்த அரசு இருக்கிறது என்று அந்த வகையிலேயும் இல்லாமல்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களைக் கேட்டுக் கொள்வது, இந்தத் தீர்மானத்தின்மீது உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். நீங்கள் எல்லாவற்றுக்கும் சேர்த்து பேரவை எடுத்த முடிவிற்கும், இன்று எடுக்க இருக்கிற சில நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் சேர்த்துக் கருத்துக் கூறிக் கொண்டிருப்பது என்பது இந்த தீர்மானத்தின்மீது நீங்கள் பேசுகிற வாய்ப்பை தவறாகப் பயன்படுத்துகிறீர்கள் என்றுதான் பொருள்படும். இதன்மீது, இந்த கோவை மாலை முரசு பத்திரிகையில் ஒழுங்காகத் தான் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. இதன் மீது ஏன் நடவடிக்கை என்று வேண்டுமானால் நீங்கள் கூறுங்கள். அதற்குப் பேரவை முன்னவர் பதில் சொல்வார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : சட்டமன்ற விதிகளிலே உரிமைக் குழு சிபாரிசு செய்தாலும்கூட அதை மீண்டும் (குறுக்கீடு) மாலை முரசிலேதான் சொல்கிறேன்— அதை உரிமைக் குழுவிற்கு நீங்கள்பரிந்துரை செய்து மறுபரிசீலனை செய்ய விதி

களிலே வாய்ப்பு இருக்கிறது. எனவே அவ்வாறு நீங்கள் முடிவு எடுக்கவேண்டுமென்று நான் பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையே நீங்கள் ஒரு திருத்தத் தீர்மானமாகக் கொடுத்திருக்கலாமே! (சிரிப்பு) இவ்வளவு விதிகளைப் பற்றி எல்லாம் சொல்கிறவர் திருத்தத் தீர்மானம் கொடுக்கலாம் என்றே இருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : திருத்த தீர்மானம் கொடுக்கலாம். திருத்த தீர்மானம் இல்லாமல் சட்டமன்றமே மீண்டும் உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம். எனவே நீங்கள் அப்படி அனுப்பி மறுபரிசிலனை செய்யவேண்டும். பத்திரிகைகளுக்கும் அரசுக்கும் சண்டை, சட்டமன்றத்திலே நடக்கின்ற நிகழ்ச்சிகளை வெளியிடமுடியவில்லை என்று வெளியிலே இதுபோன்று வருகின்ற செய்திகள் இல்லாமல் செய்வதற்கு நீங்கள் இந்த முறையிலே மறுபரிசிலனை செய்யவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி விதிமுறைகளினுடைய அடிப்படையிலே இது முதலிலேயே ஆய்வுக்கு வந்தது. முதலிலே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று கேட்கிறபோது கருத்துகள் சொல்லலாம். பிறகு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படலாம். ஏற்கனவே இந்த சட்ட மன்றத்தின் முன்பு இந்த அறிக்கைகளை வைப்பதற்கு காரணமே—வைத்து எல்லோரும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் படித்து, அவர்கள் ஏதாவது தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்றால் அந்த தீர்மானம் கொண்டு வரலாம் என்பதற்காகத் தான் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. எந்தக் கருத்தையும் எடுத்துச் சொல்வதற்கு மன்றத்திலே உரிமை உண்டு. மன்றம் முடிவு செய்வதற்கும் உரிமை உண்டு. ஆனால் இந்த மன்றம் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டு விட்டது. ஆகவே இப்போது இதில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதும் நிறைவேற்றப்பட்டு விட்டது. இப்போது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்கிற அந்த தீர்மானம் தான் வருகிறது. ஆகவே இந்த நிலையில் எந்த பரிசிலனையும் செய்வதற்கு இல்லை. எல்லாம் முறைப்படி நடந்து முடிந்து விட்டதன் காரணமாக இனி ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

1992 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவையின் மூன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் ஆம் எனக. (ஆம்)
மறுப்போர் இல்லை எனக. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி).

கோவை மாலை முரசு ஆசிரியரை அவைமுன் நேரிடையாகக் கொண்டு வந்து கண்டிக்க வேண்டும் எனப்பேரவை முடிவு செய்துள்ளதால் உடனடியாக அவ்வாசிரியரைப் பேரவைமுன் வரவழைத்து கூண்டில் ஏற்றித் தண்டனையை நிறைவேற்ற உரிய சம்மன் அனுப்பப்படும். அப்பத்திரிகையின் நிருபரான தினகரன் நாளிதழின் நிருபருக்கு இப்பேரவையின் நடவடிக்கை களைக் குறிப்பு எடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதி இன்று முதல் ரத்து செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

6. கண்டனம்.

'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி' ஆப் இந்தியா 'இதழ் ஆசிரியர் திரு. அனில்தர்க்கர்' முன்னாள் கட்டுரையாளர் திரு. கே. பி. சுனில் ஆகியோருக்குக் கண்டனம் தெரிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லஸ்ட்டிரேட்டட் வீக்லி' ஆப் இந்தியா பத்திரிகையின் ஆசிரியர் மற்றும் பதிப்பாளர் திரு. அனில் தர்க்கர் மற்றும் திரு கே. பி. சுனில் அப்பத்திரிகையின் முன்னாள் கட்டுரையாளர் ஆகியோர் கண்டிக்கப்படவேண்டிய பிரச்சினையில் ஓர் அறிவிப்பைப் பேரவைக்குத் தெரிவிக்க இருக் கிறேன்.

திரு. அனில் தர்க்கர் மற்றும் திரு. கே. பி. சுனில் ஆகிய இரு வருக்கும் பேரவையின் சார்பில் அனுப்பப்பட்ட சம்மன்படி இன்று பேரவையின் முன் அவர்கள் இருவரையும் ஆஜராக வேண்டும் என்று கோரி இருந்தேன். அவர்கள் இருவர்களிட மிருந்தும் எனக்குக் கடிதங்கள் வந்துள்ளன.

அந்தக் கடிதங்களில் திரு. அனில் தர்க்கர் அவர்கள், தான் பொறுப்பிலே இல்லாத ஒரு சமயத்திலே நிகழ்ந்த தவறுக்காக, தான் கண்டிக்கப்படவேண்டுமா என ஒரு வினாவைக்கேட்டு இருக்கிறார். அதே ஆசிரியர் பேரவையின் உரிமைக் குழுவிற்கு ஏற்கெனவே பதில் எழுதிய நேரத்தில் சம்பந்தப்பட்ட அந்தகட்டுரை வெளி யான நேரத்தில் தான் பத்திரிகையின் ஆசிரியராக இல்லை